**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.43
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் பண்பாட்டு கூறுகள்

**திருமதி மா.மாரீஸ்வரி,**

முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணன்கோவில் - 626 125, கைபேசி எண்- 9600031159,

மின்னஞ்சல் முகவரி – mareeswarimurali@gmail.com

**முன்னுரை :**

மனிதனாகப் பிறந்த அனைவரும் தங்கள் **இனங்களைச் சேர்த்து** ஒரு குழுவாக ஓர் இடத்தில் வசித்து வந்தனர். இவ்வாறு வசித்தவர்கள் தங்களுக்கு என சில குணங்களையும் சடங்குகளையும் கொண்டிருந்தனர். காலப்போக்கில் குணங்களையும், சடங்குகளையும் அவர்களது அடுத்த தலைமுறையினர் பண்பாடாகவும், பழக்கவழக்கங்களாகவும் கடைபிடிக்க ஆரம்பித்தனர். அதைப்போல மனிதர்களின் ஒரு பிரிவினரான அரவாணிகளும் தங்களுக்கென்று சில பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் வைத்துக்கொண்டு பின்பற்றத் தொடங்கினர் .

**தமிழர் பண்பாடு** :

தமிழர் பண்பாடு தமிழ் மக்களின் பண்பாடாகும். **எஞ்சியிருக்கும் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை தமிழ் மக்கள் பேசுகின்றார்கள். தமிழகம் 400** ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வசிக்கும் பகுதியாக உள்ளது. **5500** ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. **எனவே தமிழர் பண்பாடு பல ஆண்டுகளாகப் பல்வேறு தாக்கங்களைக் கண்டது .**

உலகெங்கிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வருவதால், பண்பாடு **பல்வேறு பட்டது, இந்தியா தவிர, பிற பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க பகுதியாக தமிழர் பண்பாடு உள்ளது .**

**பண்பாட்டுக்** கூறுகள் :

தமிழரின் தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக் கலை, தற்காப்பு கலை, ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், சமயங்கள், மரபுகள் சடங்குகள், நிறுவனங்கள், அறிவியலை, வெளிப்படுத்தப்படுகிறது .

தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், **சமூ**க, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவம் .

மூன்றாம் பாலின மக்கள் :

சமுதாயத்தில் பலதரப்பட்ட இன மக்கள் வாழ்கின்றார்கள், அவரவர் சமூகத்திற்குத் தகுந்தாற்போல் பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் மேற்கொள்கின்றனர். ஓர் இனத்தின் வரலாற்றை, ஒரு **சமுதாயத்தின் வரலாற்றை அவர்களின் பண்பாடு, மூலம் அறியலாம்** .

அங்ஙனம் பண்டைய தமிழர் இனத்தின் ஒரு அங்கமான

" ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இண்றே"

**(** தொல் - சொல் - நூல் **- 495 )**

ஆணாகப் பிறந்தோம் என் தன்மை மிகுதியாக இருந்தல் 'பேடி ' வந்தாள் என்னும் பெண்பாலிலே அழைக்கப்பட வேண்டுமென்கின்றது. முதன் முதலில் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியம் மேலும்,

"என்னெப் படும்கொல் **-** தோழி **?** நல்**மகி**ழ்ப்
பேடிப் பெண்க**ொ**ண்டு ஆடுகை கடுப்ப "

**(** அகம் 1- 2 **)** பாடல் 206 )

என்று கள்ளுண்டக் களிப்புடன் பேடிப் பெண்ணின் உருவம் பூண்டு ஆடும் தலைவன், என சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூறு மட்டுமல்லாது .

" ஆடவர் கண்டால் அகநலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின் "

என்று சீவகசிந்தாமணியில்

**காந்தருவதத்தை தோழி வீணாபதி அரவாணியாக காட்டப்படுகின்றார் மேலும்,**

திருமால் **எடுத்த** பத்து **அவதாரங்களில் "மோகினி" வடிவம் கொண்டு இந்திரன் சாபம் தீர்க்க அமுதம் கொடுத்ததும், சிவபெருமான் தம் உடம்பில் பாதியாக ஆண் / பெண் வடிவம் பெற்று அர்த்தநாரீஸ்வரராக இருப்பதும்** , இராமாயணத்தில் "சரயூ" என்னும் பறவை அரவாணியாகவும், மகாபாரதத்தில் அர்ச்சுனன் காடாண்ட போது ஒரு வருடம் பேடியாக வாழ்ந்தான் என்பதும் இதிகாசங்களில் இடம்பெற்றுள்ளது .

பழமையான தமிழ் இலக்கியம், இலக்கணம், காப்பியங்கள், இதிகாசங்களில் பதிவுகளில் வாயிலாக மூன்றாம் பாலின மக்கள் பண்டைய தமிழர் இனத்தின் ஒரு அங்கமாக விளங்கின்றனர். அவர்களின் பண்பாடுகளை கீழ்காணும் தலைப்புகளின் மூலம் அறியலாம் .

திருநங்கைகளின் பண்பாடு :

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஆணாகப் பிறந்த மூன்றாம் பாலினமாக மாறுவதற்குப் பல தரப்பட்ட சடங்குகள் நடத்தப்படுகின்றன .

திருநங்கையாக ஏற்றுக்கொள்வதற்குத் தத்தெடுப்பு விழா ( சுவிகாரம் எடுத்தம்) தொடங்கி இறப்பு வரை பல விழாக்கள் திருநங்கை **சமூகத்திலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. திருநங்கைகளின் அழகுக்குறிப்புகள், உடை, நம்பிக்கைகள் எனப் பலதரப்பட்ட வகையில் மூன்றாம் பாலின மக்கள் பொது மக்க**ளிலிருந்து சற்றே மாறுபட்டு உள்ளனர்.

திருநங்கைகளின் சமூகத்தில் சாதி என்ற அமைப்பு கிடையாது அவர்கள் எந்த மதத்திலிருந்து வந்தவரும் "மூன்றாம் பாலின மக்கள் " என்ற பொது சமூகமாகக் **கருதப்படுகின்றார்கள்.** ஆனால் இவர்களுக்கு என்றும் தனி மொழி, குடும்ப அமைப்பு வழிபாடு, என்று தனி பண்பாடு முறை உள்ளது .

**மொழிப் பண்பாடு** :

பண்டைய காலம் முதல் இன்று வரை பலதறப்பட்ட மூன்றாம் பாலின மக்கள் வாழும் நம்நாட்டில் பழமொழிகள் பேசும் வித்தகர்களாக மூன்றாம் பாலின மக்கள் விளங்குகின்றனர். ஆனாலும் அவர்களுக்கு என்றும் ஒரு பொது மொழி உள்ளது, அம்மொழியின் பெயர் "கவுடி பாஷா " இம்மொழி இந்தி, சமஸ்கிருதம், உருது மொழிகளின் கலவையாக காணப்படுகிறது. தற்போது இம்மொழி அதிகம் பயன்பாட்டில் இல்லை என்றாலும் மூத்த மூன்றாம் பாலின மக்களால் பேசப்பட்டு வருகிறது .

இம்மொழி தோன்றிய பல நூறு ஆண்டுகள் கழிந்தும் இம்மக்கள் தங்கள் மொழியின் பொருளை மற்ற சமுதாயத்திற்கு வெளிப்படுத்தாமல் இரகசியமாக பாதுகாத்து வருகின்றனர். அவர்களின் பேச்சு மொழி இரகசியமானதாக இருந்தாலும் அவர்களின் உடல் மொழியின் ஒன்றான "கைத்தட்டும் " முறை அவர்களின் ஆக சிறந்த அடையாளமாக விளங்குகிறது. அந்த " கைத்தட்டும் " முறையினை தங்களுக்கு பிரச்சினை ஏற்படும் போது குறியீடாகவும் அவ்வினத்தின் பண்பாடாகவும் மேற்கொள்கின்றனர் .

மூன்றாம் பாலின மொழியான " கவுடி பாஷா " என்ற சொல் தமிழ் மொழியின் எவ்வாறு அழைக்கப்படுகிறது என்பதை ஒரு சில சான்று சொற்கள் .

" கோத்தி - அரவாணி
கானா - சாப்பாடு
பந்தி - ஆண்
நாரன் - பெண்
குரு - அம்மா
சேலா - மகள்
கொச்சவாடு - ஒன்பது
நானி - ஆயா
தாயம்மா - ஆபரேசன் செய்பவர்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மோரி - குளிக்கும் இடம் "

( அகநானூறு பக் - 33 )

மூன்றாம் பாலின மக்களின் வாழ்க்கைப் பதிவுகளைத் தங்களது உண்மையான உணர்வுகளை அவர்களது மொழியின் மூலமே வெளிப்படுத்த முடியும். அவை வெறும் மொழி மட்டுமல்ல மிக முக்கியமான அடையாளமாகவும் ஆகச்சிறந்த பண்பாடாகவும் கருதுகின்றனர் என்பதை அறியமுடிகிறது .

வழிபாட்டு முறைகள் :

மூன்றாம் பாலின மக்களின் மிக முக்கியமான விழாவாக "கூவாகம் கூத்தாண்டவர் " திருவிழா விளங்குகிறது .

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டைக்கு அருகே " கூவாகம் " உள்ளது. இங்கு கூத்தாண்டவர் ( அரவான் ) கோயில் உள்ளது இங்கு வருடந்தோறும் சித்ரா பௌர்ணமியை ஒட்டி 18 நாட்கள் விழா நடைபெறுகிறது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான திருநங்கைகள் கலந்து கொண்டு பூசாரி மூலம் தாலிக்கட்டிக் கொள்கின்றனர் .

அதிகாலை கோயில் அரவான் சிரசுக்கு ( தலை ) கண் திறந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று பின்னர் அரவாணின் முழு உருவச் சிலையுடன் தேரோட்டம் நடைபெறும் மாலையில் " களப்பலி "

கொடுக்கப்படும். அப்போது திருநங்கைகள் தங்கள் தலையை கலைந்தும் நெற்றிப் பொட்டை அழித்தும் வளையல்களை உடைத்தும் பின்னர் கழுத்தில் கட்டிய தாலியை அறுத்தும் ஒப்பாரி வைப்பர். பின் அங்குள்ள குளத்தில் தலை முழுகி வெள்ளாடை அணிந்து விதவைக் கோலத்தை மேற்கொள்ளுவர். ஓர் ஆண் இறந்தால் அதனால் மிகவும் பாதிக்கப்படுவள் அவனுடைய மனைவிதான் என்ற சமூக உண்மையையும் பண்டைய தமிழரின் பண்பாட்டையும் இதன் வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது .

**மூன்றாம் பாலின மக்களின் உணவு முறை** :

அனைத்து மக்களைப் போல அந்த பகுதிக்கு ஏற்ப உணவு முறை அமைவது போல மக்களின் உணவு முறைகள் இருந்தாலும் சில உணவுகளை அவரால் உண்ணக்கூடாது என்ற விதிமுறைகள் அவர்களின் பண்பாட்டின் முக்கிய அம்சமாக உள்ளது .

தென்னிந்தியாவில் இருக்கும் மூன்றாம் பாலின மக்கள் இட்லி, தோசை, சோறு போன்ற உணவு முறையினை மேற்கொள்கின்றனர். ஆனால் வட இந்தியாவில் பாக்கரி, பரோடா, ரொட்டி போன்ற உணவுகளை உண்ணுகின்றனர். இவர்கள் உணவில் " சேவல் கறியும் , பன்றிக் கறியும் " பயன்படுத்துவதில்லை,( சீவகசிந்தாமணி பக் - 197 ) இக்கறி சாப்பிடும் வீட்டு தண்ணீர் கூட அருந்துவதில்லை என்பதன் என் வாயிலாக மூன்றாம் பாலின மக்களின் உணவுமுறைப் பண்பாட்டை அறியமுடிகிறது .

மூன்றாம் பாலின மக்களின் உடை :

மனிதனின் அடிப்படைத் தேவைகளின் ஒன்று **உடை,** அவ்வுடையில் **மூன்றாம் பாலின மக்கள் மாறுபட்டு உள்ளனர் .**

மெல்லிய புடவை அணிவார்கள், உடல் அளவில் அழகை வெளிப்படுத்த நினைப்பவர்களும் பெருமளவில் காணப்படுகின்றன. அவர்கள் உடைக்கும், தனது அலங்காரத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அவர்களை இச்சமுதாயத்திற்கு முழுமையான பெண்ணாக வெளிப்படுத்த இந்த உடையும் அலங்காரமும் முக்கிய பங்காக அமைவதை இதன் மூலம் உணர முடிகிறது .

**இறப்புப் பற்றிய சடங்கு** :

" திருநங்கைகள் இறந்த பின் அவரைத் தலைகீழாக வைத்து பிணத்தைச் செருப்பு வைத்து அடித்த பின் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்கின்றனர். பின்னர் பிற மனிதர்களை அடக்கம் செய்வது போன்றே திருநங்கையும் அடக்கம் செய்கின்றனர் ". ( அரவாணியம் பக்க - **55** )

இறந்தவரின் மருமகள்கள் அல்லது சேவாக்கள் ( மகள் ) முறையில் இருக்கும் அனைவரும் வெள்ளைப் புடவையில் 30 நாட்கள் இருக்க வேண்டும். தவறினால் இறந்தவர் கஷ்டம் கொடுப்பார் என்பது அவர்களின் நம்பிக்கை , முக்கியமாக இறந்தவர் "அறுவை சிகிச்சை " செய்யாது இருந்தால் அவருடைய ஆண்பால் காட்டும் உறுப்பினை தனியாக வெட்டி எடுத்து அவரோடு வைத்து அடக்கம் செய்வர். அவ்வாறு செய்யாமல் விட்டால் இறந்தவரின் ஆத்மா சாந்தி அடையாது (அரவாணிகள் ) என்று அவர்கள் இறப்பு குறித்த பண்பாட்டு நிகழ்வாக அமைகிறது என்பதை இதன் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது .

**முடிவுரை** :

பண்டைய தமிழ் இனத்தின் ஒரு அங்கமாக விளங்கும் மூன்றாம் பாலின மக்களின் தன்மை கூறும் விதமாக பழமையான தமிழ் படைப்புகளில் அவர்களின் பதிவுகள் மற்றும் சடங்குகள் வழிபாட்டு முறைகள் உணவு, உடை, அலங்காரம் என்று அவரின் பிறப்பு முதல் இறப்பு வரை பண்டை தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை மூன்றாம் பாலின மக்கள் எவ்வாறு பின்பற்றி வருகின்றனர் என்பதை கட்டுரையில் கூறப்பட்டுள்ளது .

**துணை நூல் பட்டியல்:**

[1.] அருணாசலம், மு. *அரவாணிகள், சங்ககாலம் முதல் நவீன இலக்கியங்கள் வரை*. 2016.

[2.] அய்யப்பன், கி. *அரவாணியம்*. விசாலட்சுமி பதிப்பகம், 2013.

[3.] முனிஷ், வெ. *அரவாணிகளின் பன்முக அடையாளங்கள்*. அன்னை இராஜேஸ்வரி பதிப்பகம், 2010.

[4.] மாணிக்கவாசகன், ஞா. *தொல்காப்பியம்*. உமா பதிப்பகம், 2010.

[5.] சுப்பிரமணியம், ச. வே. *அகநானூறு*. மணிவாசக பதிப்பகம், 2006.